பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியிடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

41 ] சென்னை—ஞாயிறு, ஜனவரி 19, *1947*. [ விலை. அணா. 2

## துணி மில்களும் சென்னை சர்க்காரும்

இப்பொழுது நமது மாகாணத்தில் மந்திரி சபைக்கு விரோதமாக ஒரு கட்டுப்பாடான கிளர்ச்சி நடந்து வருகிறது. அதில் மில் முதலாளிகளும் மொத்த வியாபாரிகளு மட்டு மின்றி அரசியல் வாதிகளில் சிலரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்த கிளர்சிக்கு நியாயமுண்டா என்பது குறித்து நான் சில விஷயங்களையும் புள்ளி விவரங்களையும் கூற விரும்புகின்றேன்.

நான் இருபது வருஷகாலமாக நூல் நூற்று வருகின்றேன். எனக்கு வருஷந்தோறும் 30 சதுர கெஜ துணி தேவையாயிருக்கிறது. அதற்கு வேண்டிய நூல் முழுவதையும் நான் நூற்று வருகின்றேன். நான் கூட்டுறவுச் சங்கங்களில் உதவி ரிஜிஸ்தாராக உத்தியோகம் வகித்து வந்தேன். அந்தக் காலத்திலும் அதன் பின்பும் மில்துணியா கதர்த்துணியா என்னும் விஷயத்தைப் பற்றி விசேஷமாக ஆராய்ச்சி செய்திருக்கிறேன்.

கிராமங்கள் வாழ்வுக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களை தம்மிடத்திலேயே உண்டாக்கிக் கொள்ளவேண்டியது போலவே உடையையும் போதுமான அளவு உண்டாக்கிக் கொள்ளவேண்டும் என்பதே சென்னை சர்க்காரின் நோக்கம் என்று தெரிகிறது. சென்னை ராஜதானியின் ஜனத்தொகை சுமார் ஐந்துகோடி. ஒவ்வொருவருக்கும் இருபதாம் நம்பர் நூலைக்கொண்டு நெய்யும் துணி ஒரு வருஷத்துக்கு முப்பது சதுர கெஜம் தேவையாகும். அப்படியானால் 5 கோடி மக்களுக்கும் 1500 கோடி சதுர கெஜம் தேவை. இவ்வளவு துணியும் நெய்ய 600 கோடி சிட்டம் அதாவது 30 கோடி ராத்தல் நூல் தேவையாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் 5 பேர்கள் இருப்பதாக வைத்துக் கொண்டால் அவர்களில் இரண்டு பேர் வேலையில்லாமல் இருக்கும் நேரத்தில் தினந்தோறும் ஒன்றரை மணி நேரம் நூல் நூற்றால் இவ்வளவு நூலையும் எளிதாக நூற்று விட முடியும். இதற்கு அவசியமாக வேண்டியதெல்லாம் மன உறுதி ஒன்றுதான். அன்னிய துணி பகிஷ்காரமும் சாத்விக சட்ட மறுப்பு இயக்கமும் நடந்த காலத்தில் இந்த மன உறுதி ஜனங்களிடத்தில் ஏராளமாகக் காணப் பட்டது. யுத்தகாலத்தில் நம்முடைய துணி மில்களெல்லாம் இராணுவத்திற்கே துணி நெய்து கொடுத்துக் கொண்டிருந்தன. அந்த காலத்தில் அகில இந்திய சர்க்கா சங்கம் பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் அநேக இடங்களில் மில் துணியின் விலையை விடக் கூட குறைந்த விலைக்கு கதரை விற்றுக் கொண்டிருந்தார்கள்.

கதர் அபிவிருத்தி அடையாமல் இருப்பதற்குரிய காரணம் கிராமங்களில பிரசாரம் செய்வதற்கும், கிராமத்து ஜனங்களுக்கு கைராட்டினம முதலிய சாதனங்கள் வழங்குவதற்கும் நூற்ற நூலை வாங்கி துணியாக நெய்வதற்கும் தகுந்த ஒரு ஸ்தாபனம் இல்லாததேயாகும். இப்பொழுதுள்ள மந்திரி சபையார் இந்த குறையைநீக்க ஏற்பாடுசெய்து வருவதால் கதர் இயக்கம் நிச்சயமாக வெற்றி பெறும். தோல்வி அடையுமோ என்று அஞ்சுவதற்குக் காரண மில்லை. இதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. சர்க்காரின் திட்டமானது அமல்நடத்திப் பார்க்கத் தகுந்ததேயாகும், ஆனால் எப்படி கள்ளுக் கடைகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, மது விலக்கை நடத்த முடியாதோ, எப்படி அரிசி மில்களை வைத்துக்கொண்டு கைகுத்தலரிசி தயாரிக்க முடியாதோ அது போலவே துணி மில்கள் வைத்துக்கொண்டு கதர் இயக்கத்தை வெற்றிபெறும்படி செய்ய முடியாது. கதர் இயக்கம் முன்னேற வேண்டுமானால் அதற்குரிய ஒரே வழி துணி மில்களை எல்லாவற்றையும் மூடி விடுவதேயாகும். அல்லது அவைகளை சர்க்கார் எடுத்துக்கொண்டு கதர் இயக்கத்துக்கு விரோதமில்லாத விதத்தில் நடத்த வேண்டும். இந்தமாதிரி செய்யாமல் சர்க்கார் மில்களையும் மில் கதிர்களையும் பெருக்குவதையே தடை செய்திருக்கிறார்கள். அதற்காக மில் முதலாளிகள் அவர்களுக்கு வந்தனம் செலுத்த வேண்டியவர்கள் ஆவார்கள்.

கதர் அபிவிருத்தி யடைந்தால் அந்த அளவுக்கு மில் உற்பத்தியும் லாபமும் குறைந்து போகுமென்று எண்ணியே மில் முதலாளிகள் சர்க்கார் திட்டத்துக்கு விரோதமாக இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மில்கள் நம்முடைய மரகாணத்திற்கு வேண்டிய நூலையும் துணிகளையும் உற்பத்தி செய்து கொடுக்கின்றனவா என்பதே நாம் கவனிக்கவேண்டிய விஷயம். மில்களில் மானேஜிங் டைரக்டர்கள் ஏராளமான சம்பளமும் கமிஷனும் பெறுகிறார்கள். பங்குதாரர்கள் 15 முதல் 60 வரையுள்ள சதமான வட்டி பெறுகிறார்கள். தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். ஆனால் நமக்கு வேண்டிய துணியோ கைத்தறிக்காரர்களுக்கு வேண்டிய நூலோ போதுமான அளவு கொடுக்கக் காணோம். நம்முடைய மாகாணத்தில் 65 துணி மில்கள் இருக்கின்றன. அவைகளில் 15 லக்ஷம் கதிர்களும் 6500 தறிகளும் வேலை செய்கின்றன. தினந்தோறும் ஒவ்வொரு கதிரும் இரண்டு ஷிப்ட் வேலை செய்து ஒரு ராத்தல் நூல் உற்பத்தி செய்வதாக வைத்துக் கொண்டால் ஒரு வருஷத்தில் 15 லக்ஷம் கதிர்களும் 300 நாள் வேலை செய்து 45 கோடி ராத்தல் நூலை உற்பத்தி செய்ய முடியும். நம்முடைய மாகாணத்திற்கு வேண்டிய துணியை நெய்வதற்கு 30 கோடி ராத்தல் நூலே தேவையாகும். நம்முடைய மாகாணத்தில் 5 லக்ஷம் கைத்தறிகள் வேலை செய்கின்றன. அவைகள் 300 நாள் வேலை செய்து தினந்தோறும் 8 சதுர கெஜம் துணி நெய்வதற்கு 20 நம்பர் நூல் 24 கோடி ராத்தல் தேவையாகும். ஆனால் கள்ள மார்க்கெட் மூலமாகக்கூட நமது கைத்தறிக்காரர்களுக்கு மாதத்தில் 10 நாட்கள் நெய்யக்கூடிய நூலே கிடைக்கின்றது. ஆகவே மில்களில் உற்பத்தியாகும் 45 கோடி ராத்தல் நூலில் கைத்தரிக்காரர்களுக்கு கிடைக்கும் 8 கோடி ராத்தல் நூல் போக

பாக்கி 37 கோடி ராத்தல் நூலும் எங்கே போகிறது? இந்த இரகசியத்தைக் கண்டு பிடிக்க வேண்டியது அவசியமாகும். அந்த நூலை ஒளித்து வைப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதை அதிக நாட்களுக்கு ஒளித்து வைத்திருக்க முடியாது. அதனால் அது நூலாகவோ துணியாகவோ நம்முடைய மாகாணத்தை விட்டு வெளியேறுகிறது என்றே சொல்ல வேண்டி இருக்கிறது. ஜனங்களிடை உலவி வரும் வதந்தியும் அதுதான். ஆதலால் சர்க்கார் திட்டம் சரியென்று நிரூபிக்க வேண்டுமானால் பிரதம மந்திரி உடனே இந்த விஷயத்தை ஆராய வேண்டியதாகும்.

நான் சொன்ன புள்ளி விவரங்களும் இந்த வதந்தியும் உண்மையாயிருக்குமானால் மில் முதலாளிகளும் அவர்களுக்கு ஒத்து ஊதுகிறவர்களும் இப்படிக் கூக்குரலிடுவதற்கு எவ்வித நியாயமும் கிடையாது. இந்த ஒழுங்கீனங்கள் எப்படி துணி கமிஷனருடைய கண்ணையும் அவருடைய சிப்பந்திகளுடைய கண்ணையும் தப்பி நடக்கின்றனவோ தெரியவில்லை. இந்த விஷயமானது மகாத்மா காந்தியடிகள் முன்னறிவுடன் கீழ்கண்டவாறு கூறுவதையே சந்தேகமற நிரூபிக்கின்றது. காந்தியடிகள் கூறுவதாவது:—

"துணிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வது வெறும் கேலிக் கூத்தாகும். சர்க்காரும் மில் முதலாளிகளும் அறிவுடனும் யோக்கியதையுடனும் நடந்து கொண்டால் ஒருவர்கூட துணியில்லை என்று அவதிப்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய கிராமங்களில் நமக்கு வேண்டிய துணியை நெய்து கொடுப்பதற்குத் தேவையான பருத்தியும் வேலையில்லாமல் இருப்பவர்களும் வேலைக்கு வேண்டிய திறமையும் போதுமான அளவில் காணப்படுகின்றன."

இந்த துணி மில்கள் நமக்கு வேண்டிய நூலையும் துணியையும் நெய்து கொடுக்கவில்லை என்பது மட்டுமன்று, அவைகள் பலவிதத்தில் நாட்டுக்குத் தீமை செய்து வருகின்றன.

கிராமங்களில் வேலை செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஆணும் பெண்ணுமாக தங்கள் கிராமத்தை விட்டு மில்களுக்குப் போய் தங்கள் உடம்பையும் ஒழுக்கத்தையும் கெடுத்துக்கொள்கிறார்கள். கிராமங்களில் விவசாயம் க்ஷீணித்து வருகிறது. அவசியமான உணவுப் பொருள்கள் உண்டாக்குவதற்குப் பதிலாக அளவுக்கு மிஞ்சி பருத்தி பயிர் செய்யப்படுகிறது. ஆயிரக் கணக்கான நெசவாளர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலை விட்டு விடுகிறார்கள். பட்டணங்களில் ஜனக்கூட்டம் அதிகமாகி சுகாதாரம் கெட்டு விடுகின்றது. இந்த மில்கள் கண்டபடி பணத்தை வாரி இறைத்தபோதிலும் அளவுக்கு மிஞ்சி லாபம் கிடைப்பதால் சென்ற ஐந்து வருஷ காலத்தில் மிகப் பெரிய ரிசர்வு நிதி சேர்த்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் இந்த நிதியை சரியான வழியில் உபயோகிக்க விரும்பினால் நாட்டுக்கு நன்மை செய்யும் கதர்த் தொழிலை நசுக்க முயலுவதற்குப் பதிலாக அயல் நாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கும் அவசியமான பொருள்களை உற்பத்தி செய்து தங்களுக்கும் ஜனங்களுக்கும் நன்மை தேடலாம்.

மதுரை — ஜி. ஸ்ரீனிவாசராகவாசாரி

## பலாத்கார மத மாற்றம்

மகாத்மா காந்தியடிகள் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒற்றுமை உண்டாக்குவதற்காக ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து கிராமம் கிராமமாக கால்நடையாக பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். ஜனவரி மாதம் 12-ம் தேதி ஜகத்பூர் என்னும் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தின் இறுதியில் கீழ் கண்டவாறு கூறினார்:—

"முஸ்லிம்கள் ஹிந்துக்களைப் பார்த்து உங்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பு வேண்டுமானால் நீங்கள் இஸ்லாம் மதத்திற்கு வந்து விடுங்கள் என்று கூறினால் அதை ஏற்றுக்கொண்டு ஹிந்துக்கள் இஸ்லாம் மதத்திற்கு வந்து விடுவார்களானால் அத்தகைய மத மாற்றத்தை பலாத்காரத்தால் செய்யப்பட்ட மத மாற்றம் என்று கூற முடியாது என்பதாக ஒரு பேச்சு சில காலமாக என்னுடைய காதில் விழுந்து கொண்டிருக்கிறது. நேற்று முதல் அது அதிகமாகி இருக்கிறது.

இப்படி முஸ்லிம்கள் கூறுவதாகச் சொல்வது உண்மையோ இல்லையோ அதைப்பற்றி நான் விசாரிக்க விரும்பவில்லை. ஆனால் நான் கூற விரும்புவதெல்லாம் இந்த மாதிரி மத மாற்றம் செய்தால் அது பயமுறுத்தி மத மாற்றம் செய்வதே என்பதேயாகும். மத மாற்றமென்பது எளிதில் செய்யக்கூடிய காரியமன்று. ஒரு காலத்தில் கிருஸ்தவ போதகர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் பஞ்ச காலத்தில் குழந்தைகளை விலைக்கு வாங்கி கிருஸ்தவர்களாகச் செய்து வளர்த்து வருவது வழக்கமாயிருந்தது. ஆனால் உண்மையாகவே அந்த குழந்தைகள் கிருஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. அதுபோலவே இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொள்வதும் உண்மையானதாகவும் உறுதியானதாகவும் இருக்கவேண்டுமானால் மதம் மாறுகிறவர் தாம் பிறந்த மதத்தையும் தாம் புகும் மதத்தையும் நன்றாக அறிந்து தாமே இஷ்டப்பட்டு மதம் மாறுதல் அவசியமாகும்.

நான் இந்த அபிப்பிராயத்தையே என் வாழ்நாள் முழுவதும் கூறி வந்திருக்கிறேன். மத மாற்றம் செய்வதை நான் ஒருநாளும் ஸ்தாபன ரீதியாகச் செய்யும் ஒரு தொழிலாக மதிக்கமாட்டேன். நான் ஹிந்துவாயிருக்கும் காரணத்தைக்கொண்டு என்னுடைய நண்பர்களை ஹிந்துமதத்தை ஏற்றுக்கொள்ளும்படி சொல்லமாட்டேன். ஹிந்துமதத்திற்கு வர விரும்புவதாக யாரேனும் என்னிடம் சொன்னால் நான் அவர்களிடம் ஹிந்து மதத்தை நன்றாய் ஆராய்ந்து அதிலுள்ள நல்ல அம்சங்களை தம்முடைய மதத்தில் இணைத்துக் கொள்ளும்படியாகவே சிபார்சு செய்வேன்.

நான் என்னை ஹிந்து என்று மட்டும் கூறிக்கொள்வதில்லை. நான் என்னை கிருஸ்தவன், முஸ்லிம், யூதன், சீக்கியன், பார்ஸீ, ஜைனன் என்றும் கூறிக் கொள்கிறேன். அதன் பொருள் யாதெனில் நான் எல்லா மதங்களிலுமுள்ள ஏற்றமான அம்சங்களை நான் என்னுடையதாகச் செய்துகொண்டிருக்கிறேன் என்பதேயாகும். இவ்விதமாக நான் மத முரண்பாடுகளுக்கு இடம் கொடுப்பதில்லை. மதத்தைப் பற்றி என்னுடைய கொள்கை இதன் மூலம் விரிவடைந்திருக்கிறது.

நான் கூறுவது எல்லோருக்கும் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் ஒவ்வொரு முஸ்லிமையும் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுவது யாதெனில் நான் கூறுவதிலிருந்து உண்மையான இஸ்லாம் மதம் இப்பொழுது சில நாட்களாக கேள்விப்படும் இஸ்லாத்தை விட எவ்வளவு சிறந்தது என்பதைக் கண்டு கொள்ள வேண்டும் என்பதேயாகும். நான் எனக்கு பல வேலைகளிருப்பினும் முஸ்லிம் வேத விற்பன்னர் எழுதியுள்ள இஸ்லாம் மதத்தின் சரித்திரத்தைக் கவனமாகப் படித்திருக்கிறேன். இங்கே நடந்துள்ள பலாத்கார மத மாற்றத்தை சரி என்று சொல்லக்கூடிய வாக்கியம் ஒன்றுகூட அதில் காணப்படவில்லை. உண்மையான மத மாற்றம் உள்ளத்திலிருந்து எழுவதாகும். பிறந்த மதத்தையும் புகும் மதத்தையும் நன்றாக அறிந்து கொண்டா

லன்றி ஹிருதய பூர்வமான மத மாற்றம் உண்டாக முடியாது.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஹிருதய பூர்வமாக ஒருவரை யொருவர் அறிந்து கொண்டாலன்றி எனக்கு திருப்தி உண்டாக மாட்டாது. அது வேண்டுமானால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவர் மதத்தை யொருவர் மரியாதையுடன் மதித்து நடக்க வேண்டும். மத மாற்றம் எவ்வித பலாத்காரமுமின்றி மனமுவந்து நடக்குமாறு விட்டுவிட வேண்டும்."

## கிராமக் கைத்தொழிலாளர்களுக்கு உதவி

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி 11-ம் தேதி லாம்சார் என்னும் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். கிழக்கு வங்காளத்தில் அக்டோபர் மாதத்தில் அட்டூழியங்கள் நடந்த காலத்தில் நோவாகாளி ஜில்லாவில் உள்ள கிராமங்களில் இந்த ஒரு கிராமத்தில்தான் போக்கிரிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. அபாயம் வரப் போவதை அறிந்ததும் ஹிந்துக்கள் எல்லோரும் திரு நிரஞ்சன் சௌத்ரி வீட்டில் வந்து அடைக்கலம் புகுந்தார்கள். அது ஒரு பலமான வீடு. அவரிடம் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் இருந்தன. பெண்களையும் குழந்தைகளையும் வீட்டிலிருக்கும்படி செய்து ஆண்கள் வீட்டைச் சுற்றியுள்ள குடிசைகளில் இருந்து கொண்டார்கள். அவற்றைச் சுற்றி வேலி யிட்டார்கள். அகழி தோண்டினார்கள். அப்படி அடைக்கலம் புகுந்தவர்கள் மூவாயிரம் பேர். இப்படி அவர்கள் துப்பாக்கிகளுடன் முஸ்தீப்பாய் இருப்பதை அறிந்ததும் போக்கிரிகள் அந்தப் பக்கம் வராமல் இருந்துவிட்டார்கள்.

காந்தியடிகள் மாலையில் நடந்த பிரார்த்தனைக்கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசினார் :—

"நீங்கள் உங்கள் வீடுகளையும் கோவிலையும் தைரியமாக நின்று பாதுகாத்தது குறித்து சந்தோஷமடைகின்றேன். இப்பொழுது சில நாட்களாக என் மனத்தில் தோன்றியுள்ள ஒரு விஷயத்தைக் குறித்துப் பேச விரும்புகின்றேன். அநேக தொழிலாளர்கள் வீடுகளை இழந்த தோடு தொழில் செய்வதற்கு வேண்டிய சாதனங்களையும் இழந்துவிட்டார்கள். இவர்களுக்கு நீங்கள் என்ன உதவி செய்யப் போகிறீர்கள் ?

பண்டைக் காலத்தில் விவசாயிகள் ஜனங்களுக்கு வேண்டிய பொருள்களை மட்டுமே பயிர் செய்தார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களை கிராம கைத்தொழிலாளர்கள் செய்து கொடுத்தார்கள். கூலி பணமாகக் கொடுக்கப்படாமல் விளை பொருள்களாகக் கொடுக்கப்பட்டது. எல்லாத் தொழில்களும் ஒன்றோடொன்று இணை பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்தன. இந்த விதமாகவே கிராமப் பொருளாதார முறை பிரிட்டிஷார் வருவதற்கு முன் நடந்து வந்தது. அதனால் முஸ்லிம்கள் உள்பட சகலரும் பரிபூர்ணமாக நன்மையடைந்து வந்தார்கள். அதன் காரணமாக அந்தக் காலத்தில் யாரும் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாமல் தவிக்கவே இல்லை.

இப்பொழுது கலகங்களின் காரணமாக கைத்தொழில்கள் செய்ய முடியாமல் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? போதுமான அளவு வேலை கொடுத்து இப்பொழுதும் அவர்களை முன்போல் ரக்ஷிக்க முடியுமென்றே நம்புகிறேன். கிராம கைத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க வீடு கட்டிக் கொடுப்பதும் அவர்கள் கைத்தொழில் செய்வதற்கு வேண்டிய கருவிகளும் மூலப்பொருள்களும் கொடுப்பதும் அரசாங்கத்தின் முதற் கடமையாகும், அத்துடன் வட்டியில்லாமல் கடன் கொடுக்கவும் வேண்டும். கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இறந்துவிட்டால் அதைப் பொருட்படுத்தவும் கூடாது. கடனுக்காக எதையும் ஈடு கேட்கக் கூடாது.

ஆனால் அரசாங்கம் இப்படிச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதிருந்து விட்டால், பணமுடையவர்கள் செய்ய வேண்டும். அவர்களும் மேற்கூறிய விதத்திலேயே உதவி செய்ய வேண்டும்; அப்படிக் செய்வது அவர்கள் கடமையாகும். முன்னைப் போலவே இப்பொழுதும் கிராமங்கள் க்ஷேமமாக இருக்க வேண்டுமானால் சகல வகுப்பாரிடையிலும் ஒத்துழைப்பு என்னும் உறவு அவசியமாக ஏற்பட்டாக வேண்டும்.

நான் ஸ்ரீராம்பூரில் இருந்தபொழுது நெசவாளர்கள் சிலர் என்னிடம் யோசனை கேட்க வந்தார்கள். எங்களுக்கு நெசவு செய்வதற்கு வேண்டிய மில் நூல் கிடைக்கவில்லை, கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் நான் அவர்கள் கைராட்டினத்தில் நூல் நூற்க வேண்டுமென்றும், நூல் நூற்பதற்கு மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் யோசனை கூறினேன். அப்படி கிராமத்தில் போதுமான ஜனங்கள் நூல் நூற்பார்களேயானால் மில் நூலை எதிர்பார்த்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்படவே மாட்டாது, இந்தவிதமாக அவர்கள் நடந்துகொண்டால் ஏழைகளுக்கு நன்மை செய்யக்கூடிய உண்மையான சுதந்திரத்துக்கு அஸ்திவாரம் இட்டவர்கள் ஆவார்கள்."

## ஆசிரம பிரார்த்தனை

காந்தியடிகள் ஸ்ரீராம்பூரில் 28-11-46 மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் தம்முடைய பிரார்த்தனைப் பாடல்களைப் பற்றிய கதையைக் கூறினார் :—

"நான் 1915 வருஷம் இந்தியாவிற்கு வந்தபொழுது பீனிக்ஸ் ஆசிரம வாசிகளுடன் நான் சாந்திநிகேதனத்தில் வந்து தங்கவேண்டுமென்று குருதேவர் காலஞ் சென்ற தீனபந்து ஆண்ட்ரூஸ் மூலமாக எனக்கு அழைப்பனுப்பி இருந்தார்.

அப்பொழுது அங்கே காகா சாயபும் ஹரிஹர சர்மாவும் ஆண்ட்ரூஸூம், பியர்ஸனும் ஒரு சங்கமாக இருந்தார்கள். அவர்கள் நடத்திய பிரார்த்தனையில் சமஸ்கிருத பாகத்தை நான் அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறேன். திருவிதாங்கூரில் ஆலயப் பிரவேசப் பிரகடனம் சம்பந்தமாக சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது ஈஷோபநிஷத்தின் முதல் ஸ்லோகத்தையும் சேர்த்துக் கொண்டேன். அது ஹிந்து மதத்தின் சாரத்தைக் கூறுகிறது என்பது எனது அபிப்பிராயம். பின்னர் அப்பாஸ் டயாப் ஜியின் குமாரி ரெய்ஹானா டயாப்ஜி குர்ஆனி லிருந்து ஒரு சுலோகத்தை சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அப்படியே செய்தேன். ஆகாகான் மாளிகையில் கஸ்தூரிபாய் இறந்த பொழுது டாக்டர் கில்டர் பார்ஸி வேத புத்தகத்திலிருந்து சில சுலோகங்களைப் பாடினார். அவைகளையும் சேர்த்துக் கொண்டேன். அத்துடன் ஒரு இங்கிலீஷ் ஸ்தோத்திரப் பாடலும் ராம்துன்னும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து, என்னுடைய பிரார்த்தனை யானது ஒரு மதத்தைச் சேர்ந்ததில்லை என்பது தெரியவரும். அதனால் எல்லா மதத்தார்களும் கொஞ்சமும் தயங்காமல் இதில் சேர்ந்து கொள்ளலாம்."

இன்பம் சுதந்திரத்தின் பயன். சுதந்திரம் அஞ்சா நெஞ்சத்தின் பயன். —பெரிக்ளீஸ்.

# தமிழ் ஹரிஜன்

ஜனவரி 19, ஞாயிறு 1947

## இந்திய மில்கள்

ஆமதாபாத்திலுள்ள துணி மில்த் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியான திரு. காந்துபாய் கே. தேசாய் தயாரித்துள்ள அறிக்கையைப் படித்தால் கீழ்க்கண்ட விஷயங்கள் புலனாகும் :—

(1) "இந்தியாவில் நடைபெறும் துணி மில் தொழில் முழுவதும் சுமார் 150 ஏஜண்டு கம்பெனிகளிடமே இருக்கிறது.

(2) அந்தத் தொழில் தேசமக்களின் நன்மைக்காக நடத்தப் படவில்லை.

(3) மில் ஏஜண்டுகள் சர்க்காரின் அந்தரங்க உதவியைக் கொண்டு துணிப் பஞ்சத்தையும் கள்ள மார்கெட்டையும் அதிக விலையையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பருத்தியை விளைவிப்பவர்களுக்கும் போதுமான அளவு பணம் தரவில்லை. கோடிக்கணக்கான பணம் லாபம் அடித்திருக்கிறார்கள்.

(4) அவர்கள் திறமையுடன் தொழிலை நடத்தவில்லை.

(5) அதனால் அவர்கள் ஜனங்களின் தர்மகர்த்தர்களாக இருந்து அந்த தொழிலை நடத்த தகுதி அற்றவர்கள் ஆகிவிட்டார்கள்.

(6) அத்துடன் மில் தொழிலில் போட்ட பணமுழுவதும் கொள்ளை லாபத்தின் மூலமாக அவர்களுக்குக் கிடைத்துவிட்ட படியால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடாமலே அவர்களிடமிருந்து அந்தத் தொழிலை எடுத்துக்கொள்வதற்கு தேசீய சர்க்காருக்கு பரிபூர்ண உரிமை யுண்டு.

திரு தேசாய் இந்த முடிவிற்கு வந்தபோதிலும் அதை வற்புறுத்துவதற்காக அவர் தமது அறிக்கையைத் தயாரிக்கவில்லை. மில் தொழிலை தேசீய மாக்குவதற்கு தேசம் இன்னும் தயாராக வில்லை என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது. பெரிய கைத்தொழிலையும் போக்குவரத்துச் சாதனங்களையும் தேசீயமாக்கி சர்க்காரே நடத்தவேண்டு மென்று எளிதில் சொல்லிவிடலாம். ஆனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு சர்க்கார் தயாராய் இருக்குமென்று சொல்ல முடியாது. இப்படி சர்க்கார் தயாராயில்லாததை அறிந்திருப்பதனால்தான் முதலாளிகளுடைய சுயநலமும் பேராசையும் அக்கிரமமும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. திரு. காந்துபாய் கே தேசாய் ஒரு சட்டசபை அங்கத்தினர். அதனால் அவர் சட்டத்தின் மூலம் செய்யக்கூடிய பரிகாரங்களையே கூறுகிறார். அதனால் தான் ஜனங்களுடைய நன்மையை மட்டும் கருதக்கூடிய ஒரு கமிஷனை சட்டபூர்வமாக ஏற்படுத்தி துணி உற்பத்தியையும் விநியோகத்தையும் செய்யவேண்டு மென்றும் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டு மென்றும் யோசனை கூறுகிறார்.

சட்டசபை அங்கத்தினர்களும் அரசாங்க நிர்வாகிகளும் செய்யக்கூடியதை எல்லாம் செய்யட்டும். ஆக்ஷேபணை யில்லை. ஆனால் ஜனங்கள் சட்டத்தையும் விதிகளையும் எதிர்பார்த்து நிற்பதும் சட்டத்தின் மூலம் தங்களுக்கு வேண்டிய துணி முழுவதும் கிடைத்துவிடு மென்று எண்ணுவதும் தவறாகும்.

நம்முடைய நிலைமையை நன்றாக ஆராய்ந்தால் புதுஇலாகா ஒன்று ஏற்படுத்தி மில்கள் முழுவதையும் சர்க்காரே நடத்துவதா யிருந்தால்கூட உதவி வேண்டிய ஜனங்களுக்கு உதவி கிடைத்துவிடப் போவதில்லை. சரியான பரிகாரம் யாதெனில் தனக்குத்தான் உதவி செய்துகொள்வதே யாகும்.

ஜனங்கள் அதிகமான துணியைப் பெறவும் அதன் உற்பத்தியைத் தேசீயமாக்கவும் உண்மையிலேயே விருப்ப முடையவர்களாக இருப்பார்களே யானால் மில் துணியை விட்டுவிட்டு ஒரு கதிர் மட்டும் உள்ளமில்லாகிய கைராட்டினத்தைத் தங்கள் வீடுகளில் பிரதிஷ்டை செய்தால் மட்டுமே அந்தக் காரியம் சாத்தியமாகும்.

கைத்தறியில் நெசவு செய்கிறவர்களும் இது விஷயமாக நன்றாக யோசிக்க வேண்டும். அவர்கள் இடைவிடாமல் தங்கள் வேலையைச் செய்ய விரும்பினால் லஞ்சம் கொடாமலும் முகஸ்துதி செய்யாமலும் தங்கள் தொழிலை நடத்த விரும்பினால் அவர்கள் மில் நூலை விட்டு விட வேண்டியது அவசியமாகும். மில் நூலுக்கு விரோதமாக கூறும் ஆக்ஷேபணைகளெல்லாம் மில் நெசவுக்கும் பொருந்தும். கையால் நூற்பதை இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்று ஒதுக்கினால் கையால் நெசவு செய்வதும், அந்த கதியையே அடைந்து விடும். மில்கள் முதலாளிகள் கையில் இருந்தாலும் சரி சர்க்கார் கையில் இருந்தாலும் சரி நூல் நூற்பவர்களும் நெசவு செய்கிறவர்களும் மில் தொழிலாளிகளே யாவார்கள். சுதந்திரமுள்ள கைத் தொழிலாளர்களாக இருக்க முடியாது. மில் நூலைக் கொண்டு நெசவு செய்து கள்ள மார்க்கெட்டில் அதிக லாபத்திற்கு விற்பதை நிறுத்தி விட்டு கை ராட்டினத்தில் நூற்கும் நூலைக் கொண்டு நெசவு செய்யும் அறிவுடைய நெசவாளரை பிழைக்கத் தெரியாதவர்கள் என்று அவர்களுடைய நண்பர்கள் கேலி செய்யக் கூடும். ஆனால் எதிர் காலத்தில் அவர்கள் தான் சரியான காரியத்தை முன் கூட்டி யோசனை செய்து ஆரம்பித்தவர்கள் என்று ஜனங்கள் கண்டு கொள்வார்கள்.

கே. ஜி. மஷ்ருவாலா.

## பயம் ஒழிக

காந்தியடிகள் 20-11-46 ல் ஸ்ரீராம்பூரில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு பேசினார் :—

"சில முஸ்லிம்கள் என்னிடம் வந்து ஹிந்துக்கள், திரும்பி வருவதையே நாங்கள் விரும்புகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஹிந்துக்கள் அவ்விதம் செய்வதற்கு வேண்டிய சரியான மன நிலைமையை இன்னும் அடைந்து விடவில்லை என்று தெரிகிறது. பயமானது அவர்களுடையமனதில் குடிகொண்டிருக்கிறது. நான் எதை அதிகமாக வெறுக்கிறே னென்றால் பயத்தைத் தான். ஏன் ஒரு மனிதன் மற்றவனுக்குப் பயப்பட வேண்டும். மனிதர்கள் கடவுள் ஒருவருக்குத்தான் பயப்பட வேண்டியவர்கள். அவ்விதம் நடந்து கொள்வார்களேயானால் மற்ற பயங்களெல்லாம் அவர்களுடைய மனத்தை விட்டு அகன்று போகும். போலீசும் ராணுவமும் போன பிற்பாடு மறுபடியும் அக்கிரமங்கள் ஆரம்பமாகும் என்று ஹிந்துக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் பயத்தால் பீடிக்கப் பட்டவனுக்கு எந்த இடமும் பாதுகாப்பளிக்கப் போவதில்லை. அப்படிப் பட்டவனுக்குப் போலீசும் ராணுவமும் தான் என்ன உதவியை அளித்து விட முடியும்? ராணுவ உதவியையும் போலீஸ் உதவியையும் எதிர் பார்த்து வாழ்வது நம்மை நாமே பலவீனப் படுத்திக் கொள்வதாகும். ஆதலால் உயிருக்குப் பயந்து அபாயம் வருமென்று எண்ணி ஊரை விட்டு ஓடுவது அவமானமான காரியமாகும். ஆதலால் என்னைப் போன்றவர்கள் இந்தக் கிராமங்களில்

பழி வாங்குதல் முதலில் இனியது ; ஆனால் சீக்கிரத்தில் தன்னைக் கொல்லும் விஷமாக மாறிவிடும்.—மில்டன்.

தைரியமாக நடமாடிக் கொண்டும் வசித்துக்கொண்டும் இருப்பதைப் பார்த்து அவர்கள் மனத்தில் தைரியத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். என்னிடத்திலுள்ள மனோ தைரியத்தை மற்றவர்களுக்கு ஊட்ட எனக்கு சக்தியுண்டோ இல்லையோ தெரியாது. எனக்கு மனோ தைரியம் உண்டா இல்லையா என்பதை சோதித்தறிந்து கொள்வதற்காக நான் தனியாக இந்தக் கிராமத்தில் வசிப்பதற்காக வந்திருக்கிறேன். கடவுளிடம் எனக்குள்ள அசையாத பக்தியைக் கொண்டு எதிர்ப்பவர்களை நண்பர்களாக்கவும் நண்பர்களுக்கு நம்பிக்கை யூட்டவும் முயல எண்ணி இருக்கிறேன். இங்கே நான் முஸ்லிம்களிடையே வசித்து அவர்களுடைய மனதை அறிந்து கொள்வேன். அவர்களும் என்னுடைய மனதை அறிந்து கொள்வார்கள். அதன் மூலம் ஒற்றுமை யுண்டாகு மென்று நம்புகிறேன்.”

காந்தியடிகள் இதே விஷயமாக 27-ம் தேதி கூட்டத்தில் பேசியதாவது :—

“ஒரு ஹிந்து தனியாக முஸ்லிம்களிடையில் வசிக்க வேண்டி யிருந்தாலும் தைரியமாக வசிக்க வேண்டுமென்றே கூறுகிறேன். ஆணானாலும், பெண்ணானாலும் இத்தகைய மனோ தைரியம் அவசியமாகும். ஆணைப் போலவே பெண்ணும் சுதந்திரமாக இருக்க வேண்டும். வீர மென்பது ஆணுக்கு மட்டும் சொந்தமான தன்று. தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஜனங்கள் தங்கள் சுய மரியாதையை மறந்து விடுகிறார்கள். ஆனால், மானத்தைக் காப்பதற்காக பிராணத் தியாகம் செய்ய தயாரா யில்லாதவர்களுக்கு எந்த விதமான சுயராஜ்யமும் கிடைக்கப் போவதில்லை. முஸ்லிம் மந்திரிகள் இஸ்லாம் மதத்தின் மானத்தைக் காப்பதற்காக ஹிந்துக்களைத் திரும்பி வரும்படியாக அழைக்கிறார்கள். நான் அவர்களுடைய சொல்லை நம்புகிறேன். நீங்களும் நம்புங்கள். நம்புகிறவர்கள் ஒருநாளும் நஷ்டமடைவதில்லை. ஏமாற்றுகிறவர்களே எந்தக் காலத்திலும் நஷ்ட மடைகிறார்கள். எந்த மதத்திலும் போக்கிரித்தனத்திற்கு இடம் கிடையாது.”

## செய்ய வேண்டியவர் யார்?

இந்தக்காலத்தில் யுவர்களிடையும் யுவதிகளிடையும் நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகி வரும் சுருட்டுக் குடிக்கும் வழக்கத்தைப் பற்றி ஒரு வைத்தியர் வருத்தப்பட்டு எழுதி யிருக்கிறார்:—

“10 வருஷங்களுக்கு முன்னால் காணப்பட்டதை விட அதிகமான ஸிகரெட் விளம்பரங்கள் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. அந்த விளம்பரங்களில் யுவதிகள் ஸிகரெட் குடிப்பதுபோல் சித்திரம் வரைகிறார்கள். அதிலிருந்து ஸிகரெட்டுகளை விற்பதற்கு யுவதிகளையே அதிகமாக எதிர் பார்ப்பதாகத் தெரிகிறது. சிலர் ஸிகரெட்டுக்குப்பின் ஸிகரெட்டாகக் குடிக்கிறார்கள். புகையிலை உபயோகத்தால் நாக்கில் புற்று நோய் சுவாசப்பை நோய் ஹிருதய நோய் நரம்பு தளர்ச்சி போன்ற வியாதிகள் உண்டாவதாக வைத்தியர்கள் கூறுகிறார்கள். காந்தியடிகள் இந்த தீமையை ஒழிப்பதற்கு எதுவும் செய்யாதிருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது.”

காந்தியடிகளும் காங்கிரஸ் சர்க்காரும் ஸினிமாவால் ஏற்படும் தீமைகளை தடுப்பதற்கான காரியங்கள் எதுவும் செய்யவில்லை என்று ஒரு பெண்மணி கடிதம் எழுதி இருக்கிறார்:—

“காந்தியடிகளும் ஜவஹர்லால் அவர்களும் ஸினிமாக்களுக்குச் சென்று அந்தப் படங்கள் யுவர்களுடைய வாழ்வையும் யுவதிகளுடைய வாழ்வையும் எவ்வளவு தூரம் கெடுத்து வருகின்றன என்பதை கவனிக்க வேண்டுமென விரும்புகிறேன். ஸினிமா படங்கள் இளைஞர்களுடைய மனத்தில் காம எண்ணங்களையும் தவறான ஒழுக்க முறைகளையும் உண்டாக்குகின்றன. ஸினிமாவால் ஏற்படும் தீமைகள் மதுபானத்தால் ஏற்படும் தீமைகளைவிட குறைந்தவைகள் அல்ல. மதுபானத்தை தடுப்பது நியாயமானால் சினிமாத் தீமையைத் தடுப்பதும் அவசியமாகும். நம்முடைய பொதுஜன அரசாங்கங்கள் இந்த தீமையை உடனே நசுக்கி விடவேண்டும். கால தாமதம் செய்யலாகாது.”

இந்த இரண்டு நிருபர்களும் எண்ணுவது போலவே அநேகர் எண்ணுகிறார்கள். அவர்கள் கூறுவதில் அதிகமான உண்மை இருக்கவே செய்கிறது. பொதுஜன சர்க்கார் அவற்றை கவனிக்கவேண்டியது அவசியமாகும். ஆனால் மகாத்மாக்களும் பொதுஜன சர்க்காரும் சர்வ வல்லமை உடையவர்கள் அல்லர் என்பதை சீர்திருத்தவாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். நன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஜனங்கள் மன உறுதியுடன் எதிர்த்தாலன்றி எந்தத் தீமையையும் ஒழித்துவிட முடியாது.

மகாத்மாவாயிருப்பவரிடம் தண்டிக்கத் தக்க அதிகாரம் கிடையாது. அதை அவர் விரும்புவதும் இல்லை. எது நன்மை எது தீமை என்பதை போதிக்கவும் அதை தாமே நடத்திக் காட்டவும் செய்வார். அவ்வளவுதான் அவர் செய்யக் கூடியதாகும். இந்த காலத்திலுள்ள சர்க்கார்கள் செய்யக் கூடியது, குற்றம் செய்கிறவர்களைத் தண்டிக்கக் கூடிய சட்டத்தை இயற்றுவது ஒன்றுதான். இந்த இரண்டு வழிகளைத் தனித் தனியாக உபயோகித்தாலும் சேர்த்து உபயோகித்தாலும் வெற்றிபெற வேண்டுமானால் அத்துடன் ஜனங்களும் ஒத்துழைத்தாக வேண்டும். ஒரு காரியம் எல்லா ஜனங்களாலும் தீமை என்று கருதப்பட்டாலும் அதை ஒழிக்கும் விஷயத்தில் ஜனங்கள் சீர் திருத்த வாதியுடனும் சர்க்காருடனும் ஒத்துழைத்தால்தான் அதை ஒழிக்கமுடியும். தீய காரியத்தைச் செய்பவர்கள் சுயநலம் வாய்ந்தவர்கள் சமூக விரோதிகள். அவர்கள் மிக குறைவான தொகையினரா யிருந்தால் அரசாங்கம் அந்த தீமையை ஓரளவு ஒழித்துவிட முடியும். ஜனங்களில் பெரும்பாலோர் சீர்திருத்தத்தை மேற்கொண்ட பின்பும் ஒரு சிலர் அதற்குத் தடையா யிருக்கும் பொழுது தான் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அது வெற்றிபெறும்.

இப்பொழுது நிருபர்கள் கூறும் இரண்டு தீமைகளையும் கவனித்தோமானால் பொதுஜனங்கள் அவைகளை முற்றிலும் வெறுக்கவில்லை என்பது தெரிய வரும். அநேகர் அவைகளை தீமைகளென்று ஒப்புக்கொண்டபோதிலும் அவைகளில் ஈடுபடவே செய்கிறார்கள். ஆசிரியர்களும் மாணாக்கர்களும் தந்தையும் மக்களும் மடாதிபதிகளும் சிஷ்யர்களும் கூட ஒன்று சேர்ந்து புகை குடிக்கிறார்கள். ஆபாசமான படங்களைப் பார்க்கப் போகிறார்கள். புகை பிடியாதவர்கள் கூட நண்பர்களுக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். நண்பர்கள் குடித்தால் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தையர்கள் தங்களுக்குப் பிரியமில்லாவிட்டாலும் சினிமாவுக்குப் போக தங்கள் குழந்தைகளுக்குப் பணம் கொடுக்கிறார்கள். மதுபான விஷயத்தில் இப்படி நடப்பதில்லை. ஆதலால் இந்த இரண்டு தீமைகள் விஷயத்திலும் தடை செய்வதற்கான சட்டங்களை இயற்றினாலும் முற்றிலும் வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஜனநாயக சர்க்காரும் சட்ட சபையும் வேறு. சீர்திருத்த வாதிகளும் தூய வாழ்வைப் போதிப்பவர்களும் வேறு. சர்க்கார் சாதாரண மக்களுடைய பிரதிநிதி. சட்டசபை மெம்பர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் என்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. சாதாரண மக்களுடைய நன்மைக்குகந்தவாறு நடக்கக்கூடியவர்கள் என்பதற்காகவே தேர்ந்

கந்தையும் கஞ்சியும் அற்றார், காரணம் நீ எனக் கருதாய். —நாமக்கல் கவிஞர்.

தெடுக்கப்படுகிறார்கள். ஆதலால் ஜனங்களுடைய வாழ்விலும் வழக்கத்திலும் சீர்திருத்தம் உண்டாக்க விரும்பினால் அதற்கான ஆரம்ப வேலையைச் செய்ய வேண்டியவர்கள் போதகர்களும் பத்திரிகாசிரியர்களும் எழுத்தாளர்களுமே யாவார்கள்.

பொதுஜன சர்க்கார் தேசத்திலுள்ள எல்லா கட்சிகளுக்கும் பிரதிநிதித்வம் வாய்ந்ததாக இருந்தாலும் கூட ஜனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சர்க்காரை எதிர்ப்பார்க்கும் வழக்கத்தை விட்டு விடுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தான் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ முடியும். பாதையில் கிடக்கும் பாராங் கற்களை புரட்டி அப்புறப்படுத்துவதற்காக யானையை உபயோகிக்கலாமே யன்றி கூழாங் கற்களையும் குப்பை கூளங்களையும் அப்புறப்படுத்துவதற்காக உபயோகிக்க முடியாது. இந்த வேலையை மனிதர்கள் தான் செய்ய வேண்டும்.

கே. ஜி, மஷ்ருவாலா.

## வயதானவர் விவாகத் தடை

திருமதி லீலாவதி முன்ஷி பம்பாய் மாகாணத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் பலதாரம் மணம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேறும்படி செய்து விட்டார். இப்பொழுது வயதானவர் செய்யும் விவாகங்களைத் தடுப்பதற்காக ஒரு மசோதாவைத் தயார் செய்திருக்கிறார்.

பதினெட்டு வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்ணுக்கும் 45 வயதுக்கு மேற்பட்ட ஆணுக்கும் நடைபெறும் விவாகத்தைத் தடுப்பதே அவருடைய நோக்கம். அத்தகைய விவாகத்தை செய்து கொள்கிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள். பலதாரம் மணந்தால் அந்த விவாகம் செல்லாது. ஆனால் இந்த விவாகம் செல்லும். ரத்து ஆகாது. அதாவது இந்த விவாகம் நடந்து விட்டால் அந்தச் சிறுமிக்குக் கிடைக்கக் கூடிய ஒரே ஆறுதல் மணமகன் தண்டிக்கப்படுவான் என்பது மட்டுமே.

இது போதாதென்று எனக்குத் தோன்றுகிறது. மணமகனை குற்றவாளி என்று தீர்மானிப்பதோடு கீழ்கண்ட காரியமும் செய்ய வேண்டும். பெண்ணை மணமகனுடன் வாழ விடாமல் மேஜர் (18 வயது) ஆகும்வரை பெற்றோர்களிடமே வாழச் செய்ய வேண்டும். மேஜர் ஆகி மூன்று மாதங்களானதும் மணமகனுடன் வாழப் பிரியமா என்று கேட்க வேண்டும். அவள் பிரியப்படாவிட்டால் விவாகத்தை ரத்து செய்துவிட வேண்டும். வாழப் பிரியப்பட்டால் மணமகன் மீது உள்ள குற்றச்சாட்டை நீக்கி விட வேண்டும். இப்படிச் செய்யாமல் மணமகனைத் தண்டித்து அவனுடன் வாழச் செய்வதால் அந்தப் பெண்ணுக்கு எவ்வித நன்மையும் உண்டாக மாட்டாது.

இந்தச் சட்டத்தில் இப்படி வயது குறிப்பிட்டிருப்பது சரியில்லை. 17 வயது பெண் 45 வயது ஆணை விவாகம் செய்ய முடியாது. ஆனால் 14 வயதுச் சிறுமி சாரதா சட்டப்படி விவாகம் செய்து கொள்ளலாம். ஆகவே 14 வயது சிறுமி 44 வயது வந்தவனை மணந்து கொள்ளலாம் என்று ஆகிறது. இது ஒன்றுக்கொன்று விபரீதமாக இருக்கிறது. ஆதலால் எந்தப் பெண்ணையும் அவளுடைய வயதைப் போல் 2½ மடங்கு வயதுக்கு அதிகமாக உள்ளவர்க்கு மணம் செய்து கொடுத்தலாகாது என்று கூறி விட்டால் போதுமானது என்று நினைக்கிறேன்.

கே. ஜி. மஷ்ருவாலா.

## அஸ்ஸாம்

அஸ்ஸாம் இந்தியாவில் இழிவாக நடத்தப்படும் மாகாணம் போல் தோன்றுகிறது. ஆயினும் பிரிட்டிஷ் ராஜதந்திரம் செய்யும் கொடுமைகளை எதிர்த்து நிற்குமானால் அது வருங்காலத்தில் சிறப்பு அடையும் என்பதில் சந்தேகமில்லை. அங்கே பல இனத்தார்களும் பல பாஷைகளும் காணப்பட்ட போதிலும் அது ஒரே மாகாணம்தான். அஸ்ஸாம் கவர்னரான ஸர். ஆன்ட் ரூ க்ளோ கூறுவதாவது:—

“அஸ்ஸாமில் பல இனத்தார்கள் இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் எல்லோரும் ஒரே சமூகமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள். இதை இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாது.”

இந்த மாதிரி ஒற்றுமையாக வாழ்வது ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு ஒத்ததாகத் தோன்றவில்லை. அதனால்தான் வங்காளி பாஷை பேசும் சில்ஹத் ஜில்லாவும் கச்சார் ஜில்லாவும் வங்காளத்துடன் சேர்க்கப்பட வேண்டியிருக்க அஸ்ஸாமுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஜில்லாக்களும் உள்ள சூர்மா பள்ளத்தாக்கிற்கும் அஸ்ஸாம் பள்ளத்தாக்கிற்கும் இடையில் காசி மலைகளும் ஜாந்தியா மலைகளும் காணப்படுகின்றன. அதனால் இரண்டு பள்ளத்தாக்குகளுக்கு மிடையில் அதிகமான போக்குவரத்து இல்லை. இதைக் காரணமாகக்கொண்டு இந்த இரண்டு ஜில்லாக்களையும் வங்காளத்துடன் சேர்த்து விட வேண்டுமென்று சொன்னால் அதில் அர்த்த முண்டு. ஆனால் அஸ்ஸாம் முழுவதையுமே வங்காளத்திற்கு கொடுத்து விட வேண்டுமென்று சொல்வதற்கு, எள்ளளவு நியாயமும் கிடையாது. பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுவிடாமல் இறுகப் பிடித்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்று எண்ணவே வேண்டி இருக்கிறது. அஸ்ஸாமிலுள்ள ஜனங்கள் தங்கள் மாகாணத்தை வங்காளத்துடன் சேர்ப்பதை எதிர்க்கிறார்கள். அது பிரிட்டிஷ் சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் அவர்கள் அஸ்ஸாமை வங்காளத்துடன் சேர்ப்பதற்கேத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அஸ்ஸாம் அரசியல் நிர்ணய சபையில் எந்த ஸெக்ஷனில் உட்காரப் பிரியப்படவில்லையோ அந்த ஸெக்ஷனில் உட்காரும்படி நிர்பந்திக்கப்படுகிறது. அந்த ஸெக்ஷனில் உட்கார்ந்து கொண்டு பிறகு பிரியப்பட்டால் பிரிந்து போய் விடலாம் என்று கூறப்படுகிறது. அப்படிப் பிறகு பிரிந்து போக முடியாதபடி என்ன என்ன சிக்கலான நிலைமைகள் ஏற்படுமோ யார் அறிவார். முஸ்லிம் லீக் இந்தியாவை பிரித்து விட வேண்டுமென்று சொல்லுகிறது. அதற்கு வங்காளத்தில் அதிகமான மெஜாரட்டி பலம் இருக்கிறது. ஆதலால் அது சட்ட ரீதியாக அஸ்ஸாமின் கழுத்தை இறுகப் பிடித்து நெரித்து விட முடியும் என்பதில் சந்தேகமில்லை. இப்படி மக்களை அநியாயமாக சோதனைக்குள்ளாக்குவது எவ்வளவு கொடிய காரியம்.

இது போலவே மேற்குப் பக்கத்தில் சீக்கியர்களையும் எல்லைப் புறத்துப் பட்டாணியர்களையும் பஞ்சாபுடனும் ஸிந்துவுடனும் சேர்ந்து கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். இதை எல்லாம் அறிந்திருந்தும் பெரிய சமூகத்தார் எவரேனும் பிரியப்படாத அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்ய எங்களுக்கு விருப்ப மில்லை என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி வாய் கூசாமல் கூறுகிறார்.

இன்று ஒரு தீமையான இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள நாக ஜாதியாரையும் இதர மலை ஜாதியாரையும் ஒன்று சேர்த்து ஒரு தனி மாகாணம் உண்டாக்க சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்தால் என்ன நேரும் என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். நாக ஜாதி தலைவர்களில் சிலருக்கு இது உத்ஸாகத்தை அளிக்கலாம். ஆனால் விஷயத்தை ஆற அமர யோசிக்கும் தலைவர்கள் தீர்க்கமாக ஆராய்ந்து ஒன்று

கூடி "வோகா" தீர்மானம் என்று வழங்கப் பெறும் கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள் :—

(1) "இந்த நாகா தேசீய கௌன்ஸிலின் லக்ஷ்யம் சகல நாக ஜாதியாரும் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும் என்பதாகும்.

(2) இந்த கௌன்ஸில் அஸ்ஸாமை வங்காளத்துடன் சேர்ப்பதை பலமாகக் கண்டிக்கிறது.

(3) அஸ்ஸாம் சுதந்திர இந்தியாவில் சுய ஆட்சி பெற்ற மாகாணமா யிருக்கவேண்டும். நாக மலைப் பிரதேசம் அஸ்ஸாமில் ஸ்தல சுய ஆக்ஷி பெற்ற ஒரு பகுதியாக இருக்க வேண்டும். நாக ஜாதியாரின் நலன்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

(4) நாக ஜாதி யாருக்குத் தனித் தொகுதி தர வேண்டும்."

இந்த மலை சாதியார்களுக்கு சுயராஜ்ய வித்தை தெரியா தென்று எண்ண வேண்டாம். இப்பொழுது பிரிட்டிஷ் ஆக்ஷி நடக்கும் காலத்தில்கூட அவர்கள் கிராமங்களில் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்கிறார்கள். அபூர்வமான சமயங்களில்தான் கொலை போன்ற கொடிய குற்றங்களை தவிர்த்த வழக்குகள் பிரிட்டிஷ் கோர்டுகளுக்கு விசாரணைக்கு வருகின்றன. அவர்களுடைய விசாரணை முறை வருமாறு :—

ஒரு ஜாதிக்குள் ஏற்படும் வழக்குகளை அந்த ஜாதி பஞ்சாயத்தாரே விசாரித்து முடிவு செய்கிறார்கள். இரண்டு ஜாதியாருக்கிடையில் உண்டான வழக்கா யிருந்தால் அந்த இரண்டு ஜாதி பஞ்சாயத்தாரும் ஒன்று கூடி விசாரணை செய்கிறார்கள். அதி முக்கியமான விஷயமா யிருந்தால் சகல பஞ்சாயத்தாரும் ஒன்று கூடி முடிவு செய்கிறார்கள். பஞ்சாயத்தார்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு ஜாதியாரும் சுய ஆக்ஷி நடத்துகிறார்கள். ஜனங்கள் வயதை வைத்து மூன்று பிரிவினையாகப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். மூத்தவர்கள் யோசனை சொல்லுகிறார்கள். நடுவயதினர் முக்கியமான சமூகச் சேவையைச் செய்கிறார்கள். இளைஞர்கள் சாதாரணமான காரியங்களைச் செய்கிறார்கள். ஒவ்வொரு மலை ஜாதியாருக்கும் தனித் தனியாக ஒரு பாஷை யுண்டு. பொதுவான பாஷை இங்கிலீஷ் பாஷை. ஆனால் அது வெகு சிலருக்கே தெரியும். இங்கிலீஷை நீக்கிவிட்டு அஸ்ஸாம் பாஷையை பொது பாஷையாக வைத்துக் கொள்ள அவர்கள் தயாரா யிருக்கிறார்கள். அனேகருக்கு அஸ்ஸாம் பாஷை தெரியும். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிவிட தீர்மானித்திருக்கிறார்கள் என்பது உண்மையானால் ஏன் நாட்டில் ஒற்றுமை யின்மையை வளர்க்கக் கூடிய நிலைமையை இன்னும் அவர்கள் சிருஷ்டித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது விளங்க வில்லை. மலை ஜாதியார் எப்பொழுதும் இந்தியாவுடனேயே சேர்ந்திருக்க வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும். மலை ஜாதியாரைத் தனியாகப் பிரித்து விட்டால் அவர்கள் அயல் நாட்டுப் படை எடுப்பையும் உள் நாட்டுக் குழப்பத்தையும் தாங்க முடியாது என்பதையும் அறிவார்கள். மலை ஜாதியாருக்கு வேண்டிய தெல்லாம் பரிபூர்ணமான சுய ஆக்ஷியே யாகும். உத்தியோகஸ்தர்கள் அனுதாப முடையவர்களாக இருந்து உதவி செய்தால் மலை ஜாதியார் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே சமூகமாக ஆகிவிட முடியும். அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள மற்ற ஜனங்கள் அவர்களுக்கு உயிர் அளிக்கக் கூடிய கல்வி தர வேண்டும். விவசாய அபிவிருத்திக் கான முறைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். போக்கு வரத்து வசதிகளை அபிவிருத்தி செய்யவேண்டும். குடிசைக் கைத் தொழிலை விருத்தி செய்ய வேண்டும். அஸ்ஸாம் இது வரை ஒத்துழைத்ததுபோல் வங்காளத்துடனும் பீகாருடனும் ஒத்துழைக்கலாம். ஆனால் வங்காளத்தோடு சேர்ப்பதை மறுத்து பிரிக்கப் படாத சுதந்திர இந்தியாவில் சுய ஆக்ஷி பெற்ற ஒரு தனி மாகாணமாகவே இருக்கவேண்டும்.

காக்கா கலேல்கார்.

## இந்தியத் துணித் தொழில் (1940—1946)

### முதலீடு

தேசத்திலுள்ள சகல துணி மில்களில் போடப் பட்டிருக்கும் முதல் 50 கோடி ரூபாய். எல்லா மில்களையும் 150 ஏஜண்டுகளே நிர்வகித்து வருகிறார்ள். இந்த 150 பேரும்தான் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான ஏழை மக்களின் நன்மையை லக்ஷ்யம் செய்யாமல் தங்கள் நலனை மட்டும் எண்ணி இந்த பெரிய கைத் தொழிலை நடத்தி வருகிறார்கள்.

இந்த மில்களுக்கு நூறு கோடி ரூபாய் பெறுமான கட்டடங்களும் மெஷின்களும் இருக்கின்றன. இவைகளில் ஒரு கோடி கதிர்களும் 2 லக்ஷம் தறிகளும் வேலை செய்கின்றன. யுத்தத்திற்கு முன் 5 லக்ஷம் பேர் வேலை செய்தார்கள். 420 கோடி கெஜம் துணி உற்பத்தியாயிற்று. இப்பொழுது 7 லக்ஷம் பேர் இரவிலும் வேலை செய்தும் அதற்குத் தக்க அளவு துணி உற்பத்தி அதிகரிக்கவில்லை. அதற்குக் காரணம் அதிக லாபம் கிடைப்பதால் முதலாளிகள் அதிக கவனம் செலுத்துவதில்லை என்பதே யாகும்.

### யுத்தகால லாபம்

யுத்தத்திற்கு முன்னர் வருஷம் மொத்த லாபம் 6 கோடி ரூபாய். நூலும் துணியும் அறுபதுகோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்து 72 கோடிக்கு விற்றார்கள். துணியின் விலை 1941 ல் ஏற ஆரம்பித்து 1943 ல் $5\frac{1}{2}$ மடங்கு அதிகமாகப் பெருகிற்று. அப்பொழுது கூட கள்ள மார்கெட் ஏற்பட்டு விட்டதால் ஜனங்கள் அதிகமாக விலை கொடுத்தே வாங்கவேண்டி யிருந்தது. சர்க்கார் இதைத் தடைசெய்வது போல் ஏதோ செய்தார்கள். ஆனால் உண்மையில் கள்ள மார்கெட் செழித்து ஓங்கியது. முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்தார்கள். ஜவுளி கன்ட்ரோல் போர்டில் பெரும்பாலான மெம்பர்கள் மில் முதலாளிகளா யிருந்தால் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? சர்க்கார் பல கோடி ரூபாய்களை வரியாக எடுத்துக் கொண்டார்கள். இந்த ஏராளமான வரியை ஏழைகளிடமிருந்து மில் முதலாளிகள் வசூலித்துக் கொடுத்தார்கள்.

யுத்தத்திற்கு முன் ரூ. 1-12-0 வுக்கு விற்ற துணி ரூ. 6-12-0 வுக்கு விற்றது. இந்த நாட்டில் இப்படி ஏறியபோதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரிட்டன் முதலிய தேசங்களில் 50 சதமானமே ஏறி இருந்தது.

50 கோடி ரூபாய் முதலுள்ள இந்தக் கைத்தொழில் சராசரியாக வருஷந்தோறும் 53 கோடி ரூபாய் லாபம் கொடுத்து வந்தது. இப்படி நாட்டிலுள்ள மக்கள் முதலுக்கும் வட்டிக்கும் அதிகமாக பணம் கொடுத்து விட்டதால் இந்த மில்களெல்லாம் நாட்டு மக்களுக்கே சொந்தமாகிவிட வேண்டும் என்று சொல்லலாம்.

### இரகசிய லாபங்கள்

இதுவரை சொன்ன லாபங்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டவை. மனேஜிங் ஏஜண்டுகளும் அவருடைய நண்பர்களும் நூலையும் துணியையும் பதுக்கி வைத்து பலகோடி ரூபாய் லாபம் அடைந்திருக்கிறார்கள்.

**பருத்தி விளைவிப்பவர் நஷ்டம்**

யுத்தத்துக்கு முன் நூறு ரூபாய்க்கு விற்ற பருத்தி யுத்தகாலத்தில் ரூ. 217க்கு விற்றது. ஆனால் துணியோ யுத்தத்துக்கு முன் ரூ. 100 க்கு விற்றது யுத்தகாலத்தில் ரூ. 275 க்கு விற்றது. ஆகவே குடியானவர்கள் பருத்தியைக் குறைந்த விலைக்கு விற்று துணியை அதிக விலைக்கு வாங்கும்படி யாயிற்று.

**மொத்த வியாபாரிகள் லாபம்**

தேசத்தில் பெரிய மொத்த வியாபாரிகள் 400 பேர் தான். அவர்களும் இந்த கொள்ளையில் பங்கு பெற்றார்கள். சாதாரண காலத்தில் அடைந்த லாபத்தைப் போல் பத்து மடங்கு லாபம் அடைந்தார்கள். அவர்களும் ஜவுளி போர்டில் அங்கத்தினரா யிருந்தார்கள்.

**வேறு நஷ்டங்கள்**

இப்பொழுது ஜனங்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களுக்கு மூலகாரணம் ஜவுளி வியாபாரம்தான். முதலில் ஜவுளி விலைதான் ஏற ஆரம்பித்தது. அதன் பின்பே மற்ற பொருள்களின் விலைகளும் ஏற ஆரம்பித்தன. ஜவுளி உற்பத்தியிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டவர்களுடைய கையில் ஏராளமான பணம் வந்ததினால்தான் கள்ள மார்கெட்டும் லஞ்சமும் அதிகரிக்கலாயின. ஆதலால் இந்த தொழிலை சீர்படுத்தினாலன்றி எவ்வித நன்மையும் செய்ய முடியாது.

**தொழிலாளர் கஷ்டம்**

தொழிலாளர்க்குப் போதுமான சம்பளம் கொடுக்கவில்லை. சம்பளம் கூடினாலும் விலைவாசி ஏற்றத்தால் சம்பளம் குறைந்துபோனதாகவே ஆகிறது.

**பரிகாரங்கள்**

மத்திய சர்க்கார் ஜவுளி கண்ட்ரோல் போர்டை உடனே கலைத்துவிட வேண்டும். அதிலுள்ளவர்களை நான் கூறப்போகும் ஏற்பாட்டில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

(1) ஜனங்களுடைய நன்மையை மட்டிலும் கருதி துணி உற்பத்தியையும் விநியோகத்தையும் கண்ட்ரோல் செய்வதற்காக சட்ட பூர்வமாக ஒரு கமிஷன் ஏற்படுத்தவேண்டும்.

(2) இப்பொழுதுள்ள வியாபாரிகள் மூலம் துணியையும் நூலையும் விநியோகம் செய்வதை நிறுத்திவிட வேண்டும்.

(3) புதிதாக வியாபாரிகளை நியமித்து பணப்பொறுப்புள்ளவர்களாகச் செய்யவேண்டும்.

(4) கமிஷன் ஏற்படுத்தும் விதியை மீறுகிறவர்களுக்கு பெருத்த அபராதமும் சிறைவாசமும் கொடுக்கவேண்டும்.

ஆமதாபாத், காந்துபாய் கே. தேசாய்

## கஜேந்திர மோக்ஷம்

காந்தியடிகள் 2-12-46 ல் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கஜேந்திர மோக்ஷத்தைப் பற்றிப் பேசினார் :- "யானைகளின் அரசனாகிய கஜேந்திரன் தண்ணீர் குடிக்கப் போன பொழுது முதலை அதன் காலைப் பிடித்து இழுத்தது. யானையால் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. கடவுளிடம் பிரார்த்தித்துக்கொண்டது. உதவியற்றவர்க்கு உதவியாக உள்ள கடவுள் வந்து யானையைக் காப்பாற்றினார். இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? எவ்வளவு பலமிருந்தாலும் கடவுளுடைய உதவி இல்லாவிட்டால் எள்ளளவும் பயன் படுவதில்லை. கடவுளை மனப்பூர்வமாக நம்புகிறவர்களுக்கு மனோதைரியம் உண்டாகும்: அந்த மனோதைரியத்தை நம்பி வாழவேண்டுமேயன்றி பிறர் உதவியை நம்பி வாழக்கூடாது. இந்தப் பாடத்தைத்தான் இந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் இப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டியது ஆகும்."

3—12—46-ல் பிரார்த்தனை நடந்தபொழுது காந்தியடிகளைப் பார்க்க வந்திருந்த இரண்டு அமெரிக்க நண்பர்கள் அதில் கலந்து கொண்டார்கள். "கடவுளே நீரே எமக்குத்துணை" என்ற ஆங்கில கீதத்தை ஆசிரியர் நெல்சன் என்பவர் பாடினார். அது ஐஸக்வாட்ஸ் என்பவர் இயற்றிய புகழ் பெற்ற பாடலாகும்.

பிரார்த்தனையின் இறுதியில் காந்தியடிகள் கூறியதாவது :—

"ஆசிரியர் நெல்ஸன் பிரார்த்தனையில் கலந்து கொண்டது குறித்து எனக்கு மிகுந்த சந்தோஷம். நான் ஆகாகான் மாளிகையில் சிறைப்பட்டிருந்த பொழுது மீராபென் இதே பாடலை பாடினார். இந்த பாடலின் கருத்து கஜேந்திரமோக்ஷ பாடலின் கருத்தை ஒத்ததாகும். உலகத்தாருதவி உபயோகமற்றுப் போகும்பொழுது உள்ளத்தில் வீற்றிருக்கும் கடவுளே உதவி செய்கிறார். மனித ஆற்றல் அழிந்து போகும். கடவுளை நம்பினால் மட்டுமே உண்மையான பாதுகாப்பு பெறுவோம். அவரே சகல ஆற்றல்களுக்கும் பிறப்பிடமாவார்."

ஆசிரியர் நெல்ஸன் பாடிய பாடலின் கருத்து வருமாறு :—

"கடவுளே உம்முடைய பாதங்களின் அடியில் உம்முடைய அடியார்கள் மகா சாந்தியுடன் வாழ்ந்து வருகிறார்கள். எங்களைக் காப்பாற்றுவதற்கு உம்முடைய புஜபலம் போதும். எங்களை அழிக்க யாராலும் முடியாது."

**நாம சங்கீர்த்தனம்**

ஸ்ரீ ராம்பூரில் 4-12-46 மாலை பிரார்த்தனை ஆரம்பமாவதற்கு முன்னால் பக்கத்துக் கிராம ஜனங்கள் நாம சங்கீர்த்தனம் பாடிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய சங்கீதத்தைக் கேட்டு காந்தியடிகள் மனம் மகிழ்ந்தார். வங்காளிகளுடைய மிருதங்கம் வாசிப்பதை அப்பொழுதுதான் முதன் முதலில் கேட்டார். அது வெகு இனிமையாக இருந்தது. அவர் கூறியதாவது :—

"நாம சங்கீர்த்தனம் பாடுவதை நான் மெச்சுகிறேன். ஆனால் ஹிருதய பூர்வமாக அதைப் பாட வேண்டும். சொல்லிக் கொடுத்ததை கிளிப் பிள்ளைகள் கூடச் சொல்லும். உயிர்க்குப் பயமில்லாத காலத்தில் கடவுளை வணங்குவதில் எவ்வித பெருமையும் கிடையாது. அபாயம் வருங் காலத்தில் கடவுளை நம்புவதுதான் உண்மையான தெய்வ பக்தியாகும்." ஒரு ஹிந்து, முஸ்லிம் பிரார்த்தனையை மன முவந்து முழு மனதுடன் ஓதினால் அதில் தவறு கிடையாது. ஆனால் அவர் உயிரையோ பொருளையோ இழக்க அஞ்சி அப்படிச் செய்வாரானால் அது தெய்வ நிந்தனையே யாகும். அவரிடத்தில் கடவுள் வசிக்கமாட்டார். சாத்தான் தான் வசிப்பார். நான் இஸ்லாம் மதத்தைப் படித்திருக்கிறேன். அது எந்தக் காலத்திலும் பலாத்காரத்தின் காரணமாக முன்னேற்றம் அடைந்ததில்லை. யாரேனும் பலாத்காரத்தின் மூலமாக இஸ்லாம் மதத்திற்கு பணி செய்ய விரும்பினால் அவர் அந்த உன்னதமான மதத்திற்கு பணி செய்தவர் ஆக மாட்டார். துரோகம் செய்தவரே யாவார். இன்று ஒவ்வொரு மதத்திலும் எத்தனையோ விதமான ஆபாசங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. ஹிந்துக்களாகிய நாம் நம்முடைய சகோதரர்களையே தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்தப் பாவத்தின் காரணமாகத்தான் நமக்கு இந்த கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை."

அச்சிட்டவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 45, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர் : என்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை